Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.ஆ. நெடுஞ்செழியன்,

ந.க.எண்: 176 /2024/அ1 **நாள்:10.06.2024**

பொருள்: **மனைப்பிரிவு** -- பேரூராட்சி நிர்வாகம் – தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை பேரூராட்சி – புத்தூர் வருவாய் கிராம புல.எண். 44/1A1A2 மற்றும் 44/1A1B இல் அமைந்துள்ள 20260 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு இறுதி ஒப்புதல் ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.06.2004
2. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017
3. அரசாணை எண்.18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020
4. அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(3)) நாள் 23.09.2020
5. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(1)) நாள் 09.12.2020
6. அரசு கடிதம் எண்.19113/நவ 4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 30.08.2017
7. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1நாள் 08.09.2017
8. தான பத்திரம் ஆவண எண் 1739/2024 நாள் 21.05.2024
9. உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.0XSZKUZS(26675)/2024/ TCP நாள் 06.06.2024
10. திரு, ஆதப்பன், திருமதி. K.மாலதி, திரு. S. அருண்குமார், திரு. R. மாதவகண்ணன் திருத்துரைப்பூண்டி என்பவரது மனு நாள் 06.06.2024
11. அம்மாபேட்டை பேரூராட்சி மன்ற தீர்மான எண். 217 நாள் 10.06.2024
12. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

****

உத்திரவு :-

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட புத்தூர் வருவாய் கிராமம் நிலஅளவை எண். 44/1A1A2 மற்றும் 44/1A1B இல் அமைந்துள்ள 20260 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கை கடிதம் எண். 0XSZKUZS(26675)/2024/ TCP நாள் 06.06.2024இன்படி இசைவு / அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு மேற்படி ஆணையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பேரூராட்சி இறுதி ஒப்புதல் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

பார்வை (11) காணும் அம்மாபேட்டை பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 217 நாள் 10.06.2024 இன்படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி உத்தரவில் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனுமதி கட்டணங்கள் ரூ. 1,63,000 (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்) சிட்டி யூனியன் வங்கி காசோலை எண் 000144 நாள் 07.06.2024 இன் படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் உத்தரவில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து ஆவணங்களில் ஏதேனும் தவறுகளோ, வில்லங்க விவகாரமோ பின்னாளில் ஏற்படும் பட்சத்தில் இந்த மனைகள் ஒப்புதல் ஆணையானது, எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
2. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையின் கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவின் நுழைவு வாயிலில் 6'X4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.
4. இந்த மனைப்பிரிவில் அமையும் நிலத்தின்மீது எவ்வித நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்க்கப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்தசட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் மனுதாரரால் உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கண்ட நடவடிக்கை நிலத்தின் மீது எடுக்கப்படும் பட்சத்தில் இந்த இறுதி ஒப்புதல் ஆணையானது எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
5. மனைகள், இறுதி ஒப்புதல் செய்யப்பட்ட பிறகு நகர் ஊரமைப்புத்துறையின் அனுமதியின்றி மனைகளை மாற்றியமைக்கவோ அல்லது மனைகளை பிரித்து விற்பனை செய்யவோ கூடாது.
6. இந்த மனைப்பிரிவுகளின் இறுதி ஒப்புதல் தொடர்பான தணிக்கை துறையில் ஆட்சேபனை ஏதேனும் எழுப்பப்படின் அதற்கான தீர்வுகளையும் மற்றும் தொகையினையும் மனுதாரரே செலுத்த வேண்டும்.
7. 7.20 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையில் இருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

(I) மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது. இப்பொருள் குறித்து மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் உண்மைக்கு புறம்பானது என்றோ, விதிமுறைகளை மீறியுள்ளது என்றோ பின்னிட்டு கண்டறியப்படின் இவ்வாணையினை மறு அறிவிப்பின்றி செயல் அலுவலரால் இரத்து செய்யப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

(II) இம்மனையில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் இதற்குரிய கட்டிட உரிமம்/அனுமதியினை உரிய கட்டணம் மற்றும் காலியிடவரி ஆகியவற்றை தனியே பேரூராட்சியில் செலுத்தி பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் தெருவிளக்கு அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் மதிப்பீட்டின் படியான தொகையினை மனைதாரரால் செலுத்தப்பட வேண்டும்.

10/6/2024

செயல் அலுவலர்,
அம்மாபேட்டை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

10/6/24

பெறுதல் :

திரு, ஆதப்பன், திருமதி. K.மாலதி, திரு. S. அருண்குமார், திரு. R. மாதவகண்ணன்
21, தட்டாரத் தெரு , திருத்துரைப்பூண்டி டவுண், திருத்துரைப்பூண்டி தாலுக்கா
திருவாரூர் மாவட்டம்

நகல் : 1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், பாபநாசம்



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate